## சப்ரகமுவ மாகாணம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சப்ரகமுவ மாகாண சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்குரிய மாகாண சபை நிதியக் கணக்கு 2013 மார்ச் 28 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரிய 2013ஏப்ரல் 15 இல் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலின் செயன் முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 28 | 28 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | 01 | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர் களுக்கானமுற்பணக் கணக்குகள் | 26 | 25 | 01 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 05 | 02 | 03 |
| (v) | நிதியக் கணக்குகள் | 03 | 02 | 01 |
| (vi) | நியதிச் சட்டக் கணக்குகள் | 03 | 03 | - |
| | | 66 | 61 | 05 |

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்கள் | பெறுமதி | சந்தர்ப்பங்கள் | பெறுமதி |
| | | | ரூபா | | ரூபா |
| (i) | கணக்குகளில் கூடுதலாகக் காட்டப்பட்டமை | 01 | 42,946,788 | - | - |
| (ii) | கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டமை | 01 | 4,106,828 | 01 | 9,296,426 |
| | மொத்தம் | 02 | 47,053,616 | 01 | 9,296,426 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

சப்ரகமுவ மாகாணத்தின் 1995 இன் 02 ஆம் இலக்க நீதிமன்ற தண்டப்பண மாற்றல் நியதிச்சட்டத்தின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் தண்டப்பணம் அல்லது தண்டணைப் பணம் என்பன அறவிடப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியிலிருந்து 02 ஆண்டு காலப்பகுதிக்குள் உரிய உள்ளூராட்சி மன்றத்தின் எழுத்துமூல வேண்டுகோளின் அடிப்படையில் மாகாண சபையால் அத் தண்டப்பணம் அல்லது தண்டனைப் பணம் உரிய உள்ளூராட்சி மன்றத்திற்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 78,957,373 ஆன (மொத்த வரியல்லாத வருமானத்தின் நூற்றுக்கு 16) நீதிமன்றத் தண்டப்பணம் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 138,872,046 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/ அறிக்கைளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 231,828,038 ஆக இருந்தமையால் ரூபா 92,955,992 ஆன வேறுபாடு இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 பெறவேண்டிய கணக்குகள்

01 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,169,350 ஆக இருந்தது.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 22 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐய வினாக்களுக்குட்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 60,064,390 ஆக இருந்தது.

#### (ஆ) கணக்காய்வுக்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் 05 நிறுவனங்களுக்குரிய ரூபா 4,096,323 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2011 யூன் 27 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட அதி விசேட வர்த்தமானி | 2012 மாகாண சபை தேர்தலின் போது மாகாண சபை அமைச்சொன்றின் கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சுப் பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்களை மீள ஒப்படைக்கும் போது 4 வாகனங்கள் 48 நாட்களும் 3 வாகனங்கள் 47 நாட்களும் குறித்த தினத்தை விட தாமதமாக ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அதில் 5 வாகனங்களுக்கு பல்வேறு சேதங்கள் ஏற்பட்டிருந்தன. அத்தோடு 5 வாகனங்களின் உதிரிப்பாகங்கள் குறைவாக ஒப்படைக்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2006 பெப்ரவரி 10 ஆம் திகதி சீஎஸ்ஏ/1/1/20 ஆம் இலக்க ஜனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி மற்றும் அ பின்னிணைப்பின் 111 ஆம் பட்டோலை | கௌரவ மாகாண அமைச்சர்களின் வெளிநாட்டு பயணங்கள் கௌரவ ஆளுனர்களினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 மார்ச் 22 முதல் 25 வரையில் கியுபாவில் இடம்பெற்ற கியுபா நட்புறவு சங்கத்தின் அமர்விற்காக அமைச்சர் ஒருவர் கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அந்த மகாநாட்டிற்காக வெளிநாடு சென்றிருந்ததுடன், ரூபா 228,750 அதற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆம் 9/2009 திகதிய ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 (iv) ஆம் பந்தி | மாகாண சபை தொகுதியில் வைக்கப்பட்டுள்ள கைவிரலடையாள இயந்திரத்தின் அச்சீட்டுக் குறிப்புக்களை கருத்திற்கொள்ளாமல் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் பேணப்பட்டு வந்த வருகை மற்றும் வெளியேறல் கையொப்ப பதிவேட்டின் பிரகாரம் ரூபா 162,710 கூட்டுத்தொகையான மேலதிக நேரக்கொடுப்பனவு செலுத்தியிருந்தமை, 06 உத்தியோகத்தர்களுக்கு வழமையான கடமை நேரத்தின் பின்னர் வழமையான கடமைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 45,018 கூட்டுத்தொகையான மேலதிக நேரக்கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிற்குரிய வருகை கையொப்ப பதிவேடு, 161 சந்தர்ப்பங்களில் பின்னர் மாற்றம் செய்யப்பட்டிருந்தமையால் இம் மேலதிக நேரக்கொடுப்பனவு கணிப்பீட்டின் சரியானதன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது. |
| (ஈ) | 2001 மார்ச் 28 ஆம் திகதிய 2001/01 ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | 2012 ஆம் ஆண்டில் உறுப்புரிமை இழந்து போன 12 உறுப்பினர்களுக்குரிய ரூபா 1,418,600 ஆன கடன் முற்பணம் மாகாண சபை கலைக்கப்பட்டு 06 மாதங்கள் கடந்திருந்த போதும், 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்படாமல் |

| | | |
|---|---|---|
| | | இருந்ததுடன், அத்திகதியில் நிலுவையாக இருந்த வட்டி ரூபா 29,790 ஆக இருந்தது. |
| (உ) | 2008 யூலை 28 ஆம் திகதிய ஆகா/10/ஏ/8 ஆம் இலக்க ஆளுனர் செயலாளரின் கடிதம் | சப்ரகமுவ மாகாணத்தின் கல்விப் பணிப்பாளர்களின் 2012 வருடாந்த சம்மேளனத்திற்காக ரூபா 34,350 கூட்டுத்தொகையான பங்குபற்றல் படிகளைப் பெற்றுக்கொண்டிருந்த மாகாண மற்றும் வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் 39 பேரினால் அதற்கு மேலதிகமாக மொத்தம் ரூபா 80,987 தொகை இணைந்த படிகளாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2008 செப்தம்பர் 15 ஆம் திகதிய 2008/35 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 11.1 ஆம் பிரிவு | பாடசாலை அபிவிருத்தி சங்க குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் பணம் செலவு செய்யப்பட வேண்டிய போதிலும், பலாங்கொடை வலயத்தின் பாடசாலையொன்றில் சுத்திகரிப்பு சம்பளக் கொடுப்பனவின் போது 25 சந்தர்ப்பங்களில் ரூபா 83,600 கூட்டுத்தொகையான சம்பளம் பாடசாலை அபிவிருத்தி சங்க குழுவின் அங்கீகாரம் இல்லாமல் செலுத்தப்பட்டிருந்ததுடன், சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சம்பளக் கொடுப்பனவின் போது இரண்டு நபர்களுக்காக ஒரு காசோலை மூலம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | 2007 பெப்ரவரி 28 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க ஜனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் (iii) ஆம் பந்தி | சப்ரகமுவ மாகாணத்தின் கல்விப் பணிப்பாளர்களின் வருடாந்த மகாநாடு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றிருந்ததுடன், தங்குமிடக் கட்டணமாக ரூபா 436,500 கூட்டுத்தொகையான பணம் நுவரெலியா தனியார் ஹொட்டேலொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின்<br>(i) 2.14.1 ஆம் வழிகாட்டி | வரிசை அமைச்சின் அங்கீகாரம் இல்லாமல் ரூபா 6,952,000 பெறுமதியான 06 மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (ii) 5.4.8 ஆம் வழிகாட்டி | ரூபா 3,576,000 கூட்டுப் பெறுமதியான 20 மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது செயலாற்றல் பிணைப்பொறுப்பின் செல்லுபடிக் காலத்தை மிகைத்து வழங்கப்பட்டிருந்ததுடன், காலத்தை நீடிக்கவோ அல்லது அதற்காக தாமதக் கட்டணம் அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஐ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் <u>குடியரசின் நிதிப்பிரமாணம்</u>

| | |
|---|---|
| (i) நி.பி 177 | மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்குரிய 03 நிறுவனங்களுக்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 917,133 ஆன பணம் 03 நாட்கள் முதல் 44 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் வங்கியிலிடப்பட்டிருந்தது. |
| (ii) நி.பி 571 | மாகாண சபையின் 03 அமைச்சுக்களில் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த ரூபா 7,954,044 ஆன வைப்புத்தொகை தொடர்பாக நி.பி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி 880 மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பிணைப்பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அதிகாரம் | 04 நிறுவனங்களில் பிணை வைக்க வேண்டிய 28 உத்தியோகத்தர்களிடமிருந்து நியதிகளின் பிரகாரம் பிணைப் பொறுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஒ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் <u>சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதிக்கோவை</u>

| | |
|---|---|
| (i) நிதி விதி இலக்கம் 86.4 மற்றும் 86.6 | அதிபரினால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பொருளிருப்பு சான்றிதழ் உள்ளடக்கப்படாதிருந்த ரூபா 1,984,540 கூட்டுத்தொகையான 2962 சிறுவர் கதிரைகளுக்கும் ரூபா 2,089,740 கூட்டுத்தொகையான 1201 சிறுவர் மேசைகளுக்கும் தலைமை அமைச்சினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) நிதி விதி 261.2.2 | 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு ஒக்தோபர் வரை 45 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,297,000 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 2013 பெப்ரவரி 11 ஆம் திகதி வரையிலும் 2012 ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் 2012 யூன் 11 வரை 04 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 400,000 கூட்டுத்தொகையான முற்பணங்கள் என்பன 2012 ஆகஸ்ட் 14 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அத்தோடு வழங்கப்பட்டிருந்த முற்பணத்தை தீர்ப்பதற்கு முன்னர் 54 சந்தர்ப்பங்களில் ரூபா 4,590,486 முற்பணம் மீள வழங்கப்பட்டிருந்ததுடன், கேகாலை பிரதி மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தின் 08 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 318,400 தொகை 30 நாட்களுக்கு மேற்பட்ட காலதாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தமையும் 05 சந்தர்ப்பங்களில் ரூபா 102,070 கூட்டுத்தொகையான பணத்தை குறித்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் 1-8 மாதங்கள் வரையில் தடுத்துவைத்து முழுப்பணத்தொகையையும் தீர்க்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டன. |
| (ஓ) கல்வி குணநல உள்ளீட்டு பயன்பாட்டு கொள்வனவு மற்றும் பகிர்ந்தளித்தல் வழிகாட்டல் கைநூல்<br>(i) 22 ஆம் அத்தியாயம் | ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலிருந்து 04 மாதங்கள் இறுதியின் போதும் அடுத்து வரும் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் குணநல உள்ளீட்டு நிதியம் ஈடுபடுத்தப்பட்ட முறை தொடர்பான அறிக்கையொன்று வலயக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டிற்காக கேகாலை மாவட்டத்தின் 150 பாடசாலைகள் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |

| | |
|---|---|
| (ஔ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXX ஆம் அத்தியாயத்தின் 1.2 மற்றும் 1.3 ஆம் பிரிவு | 02 வலயக் கல்வி அலுவலகங்களிற்குரிய 02 பாடசாலைகளில் மலசலகூட வசதிகள் வழங்கும் நிர்மாண வேலைகளுக்கு கொடுப்பனவு செய்யும் போது ரூபா 1,196,419 தொகை அதிபருக்கும் ரூபா 57,346 ஆன தடுத்து வைத்தல் தொகை உதவி அதிபருக்கும் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. வருமான முகாமைத்துவம்

(அ) 2007 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை வரி வருமானம் மற்றும் வரியல்லாத வருமானம் பின்வருமாறு காணப்பட்டன.

| ஆண்டு | வரி வருமானம் | வரிஅல்லாத வருமானம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2007 | 880,090,883 | 255,638,683 |
| 2008 | 1,012,846,946 | 251,306,994 |
| 2009 | 1,146,644,488 | 271,623,594 |
| 2010 | 1,382,363,156 | 321,209,919 |
| 2011 | 1,943,637,444 | 416,079,145 |

(ஆ) மாகாண சபையின் பல்வேறு நிறுவனங்களால் சேகரிக்கப்படுகின்ற வருமானத்திற்குரிய நிலுவை வருமானமான ரூபா 5,596,129 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடுவதற்கு தவறியிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நிறுவனம் | வரி ஆண்டு | நிலுவை வருமானம் |
|---|---|---|
| | | ரூபா |
| யட்டியன்தோட்டை பிரதேச செயலகம் | வருடாந்த வரி, விளைச்சல் வரி மற்றும் நீர் வரி | 5,132,472 |
| தெஹியோவிட்ட பிரதேச செயலகம் | வருடாந்த வரி, | 68,759 |
| தரணியகல பிரதேச செயலகம் | வருடாந்த வரி, | 194,347 |
| தரணியகல பிரதேச செயலகம் | நீர் வரி | 200,551 |
| மொத்தம் | | 5,596,129 |

(இ) மாகாண வருமான திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் 04 வரி வகைகளுக்குரிய ரூபா 34,871,991 ஆன நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 578,643,467 மிகையாக இருந்ததுடன், அதனை ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,056,423,606 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 477,780,139 ஆல் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 மாகாண சபைக்கு எதிராக அல்லது மாகாண சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான வழக்குகள்

10 அமைச்சுக்கள்/ திணைக்களங்களிற்கு எதிராக தொடரப்பட்டிருந்த 79 சட்டரீதியான வழக்குகளும் 2 அமைச்சுக்கள்/ திணைக்களங்களினால் தொடரப்பட்டிருந்த 05 சட்டரீதியான வழக்குகள் என்பன 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் விசாரணை நிலையில் காணப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக கிடைக்கப் பெற்ற நிதிஏற்பாடு மற்றும் அவை செலவிடப்பட்ட விதம் தொடர்பான விபரம் வருமாறு.

| | மூலங்கள் | ஆண்டின் போது பெறுவனவுகள் | மாகாண சபை நிதியத்திலிருந்து மாற்றப்பட்டவை | விசேட செயற்திட்டங்களின் கீழ் முன்னைய ஆண்டுகளில் கிடைத்த நிதிகளில் சேமிப்புக்கள் | செலவினம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | தொகுதி வாரியான மானியம் | 197,391,000 | 143,650,000 | - | 350,890,843 |
| (ஆ) | மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி நிதியேற்பாடு | 694,879,000 | - | - | 683,625,457 |
| (இ) | உலக வங்கி | 115,000,000 | - | - | 2012 ஒக்தோபர் மாதம் நிதி ஏற்பாடு கிடைத்தமையால் செலவு செய்யப்படவில்லை |
| (ஈ) | JICA மானியங்கள் | 2,303,000 | - | - | 2,303,000 |
| (உ) | விசேட செயற்திட்டங்கள் (வரிசை அமைச்சு) | 8,000,000 | - | 164,755,875 | 166,265,711 |

4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) தெஹியோவிட்ட கல்வி வலயத்தினுள் மூடப்பட்ட 21 பாடசாலைகளுக்குரிய உபகரணங்கள், தளபாடங்கள், ஆக்கபூர்வமான பயன்பாடுகள் பாடசாலை அபிவிருத்தி சங்க வங்கி கணக்குகள் மற்றும் கையிலுள்ள காசு மீதி உரிய முறையில் உரிய வலய அலுவலகத்தால் பொறுப்பேற்கப்படாமல் இருந்ததுடன், மாவனல்ல கல்வி வலயத்திற்குரிய 10 மூடப்பட்ட பாடசாலைகளுக்குரிய காணி, கட்டிடங்கள் என்பவற்றை பிரதேச செயலாளரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண வீதிகளுக்கு காபட் இடுதல் மற்றும் முடிவுறாத செயற்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2011 இன் கீழ் கேகாலை மாவட்டத்தில் காபட் இடுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த வீதிகள் தொடர்பாக, 2011 யூன் 17 ஆம் திகதி கேகாலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் காபட் இடுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த வீதிகளில் மாகாண சபையால் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளை அகற்றி எஞ்சிய பகுதிக்கு மதிப்பீடு தயாரித்தல் பொருத்தமானது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் மாகாண வீதி அமைச்சின் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 15,244,063 செலவிடப்பட்டு ரம்புக்கனை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த 08 வீதிகளில் அவ்வாறு பராமரிக்கப்பட்ட பகுதிகள் அகற்றப்படாமல் காபட் இடும் செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பெல்மதுள்ள பிரதேச சபைக்குரித்தாக ஒரே குற்றச்சாட்டு தொடர்பாக தலைவர் உட்பட 10 உத்தியோகத்தர்களுக்கு 2009 ஆம் ஆண்டின் போது குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2013 பெப்ரவரி 27 ஆம் திகதி அதிலிருந்து ஒரு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், ஏனைய 10 குற்றவாளிகள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கையை கணக்காய்வு தினமான 2013 பெப்ரவரி 23 வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

4.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) மாகாண வீதி அமைச்சினால் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 670,000 செலவு செய்து அழகிய சப்ரகமுவ என்ற பெயரில் புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டிருந்த போதிலும் 2013 மே மாதம் 30 ஆம் திகதி வரையில் அப்புத்தகங்களின் 1000 பிரதிகளில் 621 பிரதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஏப்ரல் பக்மஹ விழாவை நடத்துவதற்காக 295 விளையாட்டு கழகங்களுக்காக ரூபா 2,950,000 ஆன நன்கொடை தொகையை காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஏற்பாட்டின் மூலம் செலவிடப்பட்டிருந்ததுடன், அதற்காக விளையாட்டு கழகங்களை தெரிவுசெய்யும் போது கேகாலை மாவட்டத்தில் 294 விளையாட்டு கழகங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

நன்கொடைகள் வழங்கப்பட்டிருந்த 14 விளையாட்டுக் கழகங்கள் பதிவு செய்யப்படாமல் இருந்ததுடன், 06 விளையாட்டுக் கழகங்களின் இலக்கங்கள் தெளிவாக இருக்கவில்லை.

(இ) பலாங்கொடை கல்வி வலயத்தின் பாடசாலையொன்றில் 2012 ஆம் ஆண்டின் போது முதலாம் தரத்திற்கு சேர்க்கப்பட்ட 125 மாணவர்களின் பெற்றோரிடமிருந்து தூசி செயற்திட்டத்திற்காக ரூபா 369,000 சேகரிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு தினமான 2012 நவம்பர் 15 ஆம் வரையில் ரூபா 17,500 ஆன செலவினமொன்று தவிர வேறு எந்த ஒரு செயற்பாடும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கல்வி அமைச்சின் செயலாளரின் 2008 செப்தம்பர் 15 ஆம் திகதிய 2008/35 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் 10.4 இன் பிரகாரம் வலயக்கல்வி பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எம்பிலிபிட்டிய நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 65,880 பெறுமதியான 180 லீட்டர் அளவுடைய 04 தார் பீப்பாய்கள் ஓராண்டு காலமாக அலுவலக வளவில் வைக்கப்பட்டிருந்ததுடன், அந்தப் பீப்பாய்கள் ஓட்டையாகி தார் கசிந்து கொண்டிருந்த போதும், அதனை பாதுகாப்பதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்தமை 2013 சனவரி 23 ஆம் திகதிய பௌதிக கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(உ) ஆளுனர் அவர்களின் அலுவலகத்தின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளின் பிரகாரம் கிடைக்கப்பெற்றிருந்த புத்தகங்கள் மற்றும் வழங்கல் பதிவேட்டின் பிரகாரம் வழங்கலைக் கருத்திற் கொள்கையில் 2012 ஒக்தோபர் 12 ஆம் திகதி வரையில் உரிய பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாதிருந்த ரூபா 1,800,369 பெறுமதியான 40816 புத்தகங்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டன.

(ஊ) 2011 ஆம் ஆண்டின் போது இரத்தினபுரி கல்வி வலயத்தின் பாடசாலையொன்றில் மூன்று ஆசிரியர்களால் பாடசாலைகளுக்கு வருகை தந்துள்ள தினங்களில் ஒரு நாளேனும் குறித்த நேரத்தில் சேவைக்கு வராமல் இருந்ததுடன், பாடசாலை நடைபெற்ற 191 நாட்களில் 44 நாட்கள் முதல் 81 1/2 வரை நாட்களில் முதலாம் பாடவேளையும் 54 நாட்கள் முதல் 92 நாட்கள் வரையான நாட்களில் இரண்டாம் பாடவேளையும் இழக்கப்படும் முறையில் சேவைக்கு

சமூகமளித்து தாமத காலத்தைக் கருத்திற் கொள்ளாமல் வருகை மற்றும் வெளியேறல் பதிவேடு மற்றும் வகுப்பறை அறிக்கைப் பதிவேடுகளில் போலியாக பதிவுகளை வைத்து செயற்படாத காலப்பகுதிக்காக சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

(எ) பலாங்கொடை கல்வி வலயத்தின் மத்திய மஹா வித்தியாலயமொன்றில் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்கியதால் 2012 திசெம்பர் 07 ஆம் திகதி வரையில் பாடசாலைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 108,000 தொகையும் 2013 மே 13 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கேகாலை வலயக் கல்வி அலுவலகத்தில் ரூபா 183,938 பெறுமதியான 21 இழப்புக்கள் தொடர்பாக கோவைகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக இழப்பு மீளளிப்போ அல்லது பதிவழித்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) விசேட செயற்திட்டங்களுக்காக வரிசை அமைச்சிலிருந்து 2012 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் கிடைக்கப்பெற்றிருந்த கட்டு நிதிகளில் ரூபா 7,437,813 தொகை அந்தக் கட்டுநிதி வழங்கப்பட்ட அமைச்சுக்கள்/ திணைக்களங்களினால் 2012 திசெம்பர் 31 இல் மீண்டும் மாகாணத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமையால் மதிப்பிடப்பட்ட செயற்திட்டங்கள் ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட காலம் தாமதமடைந்திருந்ததுடன், அச்செயற்திட்டங்கள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

சப்ரகமுவ மாகாண சபையின் காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்குரிய மிட்சுபிஷி பஜரோ வகைக்குரிய ஜீப் வண்டியின் வாகன பதிவுப் புத்தகத்தின் பிரகாரம் 1994 ஆகஸ்ட் 243 வரை மாகாண காணி ஆணையாளர் நாயகத்தின் வசமிருந்த போதும் மேற்குறித்த திகதி மற்றும் 2001 திசெம்பர் 12 ஆகிய திகதிகளில் தனியார் தரப்பினருக்கு உரித்து பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதும் தற்போது அவ்வாகனம் காணி விவசாய அமைச்சினால் பயன்படுத்தப்படுவதாகவும் அது அரசாங்க வாகனமொன்றாக இருப்பதால் முன்னைய பொறுப்பளித்தலானது நடைமுறைச் சாத்தியமற்றதொன்றாக இருப்பதால் அது தொடர்பாக ஏதேனும் முறைகேடு ஒன்று இடம்பெற்றுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

4.5 நிதியத்தின் குறைப்பயன்பாடு

இரத்தினபுரி மாவட்டத்தின் 122 பாடசாலைகளில் ரூபா 22,144,,105 ஆன ஆக்கபூர்வமான நிதியம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் வங்கிக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்ததுடன், 02 நிறுவனங்களுக்கு ரூபா 390,800 கூட்டுத்தொகையான நிதி குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்தபடாது செயற்பாடற்றுக் காணப்பட்டது.

4.6 அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமாக இருந்த காணித் துண்டுகளில் 63 அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு தெஹியோவிட்ட பிரதேச செயலாளரால் வருடாந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், மேலும் 73 அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு நிரந்தர அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அக்காணித் துண்டுகளின் உரித்தை புகையிரதத் திணைக்களத்திடமிருந்து பிரதேச செயலாளருக்கு ஒப்படைத்தமை தொடர்பாக எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

4.7 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு பௌதீக சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்களின் தன்மை | எண்ணிக்கை / பரப்பளவு | பெறுமதி<br>ரூபா | செயற்பாடற்றுக் காணப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | கட்டிடங்கள் | 18 | கணக்கிட முடியவில்லை. | பெற்றுக்கொள்ள முடியவில்லை |
| (ii) | வாகனங்கள் | 2 | கணக்கிட முடியவில்லை. | மாதங்கள் 05 – 10 மாதங்கள் |
| (iii) | இயந்திரங்கள் | 4 | 40,050 | ஆண்டு 01 - 22 ஆண்டுகள் |

(ஆ) சொத்துக்களின் முகாமை தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ரூபா 80 மில்லியன் அளவில் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த இரத்தினபுரி பொது நூலாகக் கட்டிடம் 2010 மார்ச் 30 ஆம் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 2012 திசெம்பர் 20 ஆம் திகதி வரையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ii) சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சினால் 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட சிகிச்சை நிலையங்களின் போது பகிர்ந்தளிப்பதற்கு ஒதுக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் ரூபா 377,790 பெறுமதியான 582 மூக்குக் கண்ணாடிகள் எஞ்சி களஞ்சியத்தில் காணப்பட்டதுடன், அந்த மூக்குக் கண்ணாடிகள் காலாவதியாக இருந்தமையால் பாவனைக்கு எடுக்க முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தமை களஞ்சியப் பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(iii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 26,264,266 கூட்டுத்தொகையான 48 மருத்துவ உபகரணங்களும் பெறுமதி கண்டுபிடிக்க முடியாத 04 மருத்துவ உபகரணங்களும் 2013 மே 30 ஆம் திகதி வரையில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் களஞ்சியத்திலும் வைத்தியசாலைகள் மற்றும் மத்திய மருந்தக களஞ்சியங்களிலும் பயன்படுத்தாமல் காணப்பட்டன.

## 4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபரகமுவ மாகாண சபையின் விவசாய அமைச்சரின் பரிந்துரையின் பிரகாரம் ரூபா 967,500 செலவு செய்து 75 உருக்கு அலுமாரிகள் கொள்வனவு செய்யப்பட்டு விவசாய அமைப்புக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 10 உருக்கு அலுமாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 09 அலுமாரிகள் குறித்த செயற்பாட்டிற்காக செயற்திறனாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.9 இனங்கானப்பட்ட நட்டங்கள்

சப்ரகமுவ மாகாண சபையின் காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த ஜீப் வண்டியொன்று 2001 நவம்பர் 30 ஆம் திகதி தனிப்பட்ட தேர்தல் பிரச்சார நடவடிக்கைளில் ஈடுபட்டிருந்த போது இடம்பெற்ற விபத்தினால் மாகாண சபைக்கு ரூபா 216,088 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், அந்நட்டத்தை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.10 பௌதீக வளங்களின் பற்றாக்குறை

முதலாம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை வகுப்புக்கள் நடாத்திச் செல்லப்படும் பலாங்கொடை வலயத்தின் பாடசாலையொன்றில் விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றும் நூலகமொன்றும் இல்லாமல் இருந்ததுடன், 10 ஆம் 3 ஆம் தரங்கள் நடாத்தப்படும் வகுப்பறைகளின் கூரைகளை திருத்தியமைக்காமை போன்ற காரணத்தால் மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

4.11 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

(அ) நிர்மாணிப்புகள்

மாகாண சபையின் வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண நடவடிக்கை தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | நிர்மாண வேலையின் பெயர் | செயற்படுத்தும் நிறுவனம் | 2012.12.31 இல் செலவினம் | பரிசோதனைத் திகதி | அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | | |
| (i) | ரங்வல குலரத்ன சிறுவர் இல்லத்திற்கான நுழைவுவீதி மற்றும் ஓரச்சுவர் நிர்மாணம் | கைத்தொழில் அமைச்சு | 831,392 | 2012.09.22 | கொங்கிரீட் மேற்புறம் வெடிப்பு ஏற்பட்டிருந்தமை, ஓரச்சுவரின் சாந்து கலன்று சென்றிருந்தமை, ஓரச்சுவர் ஒருபக்கம் சாய்ந்திருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | கொஹிலதெனியா மெதிகலே வீதியின் 0.00 கி.மீ முதல் 2.35 கி.மீ வரை அபிவிருத்தி செய்தல் | மாகாண வீதி அமைச்சு | 1,652,075 | 2012.12.24 | நிர்ணயிக்கப்பட்ட தாரினைப் பயன்படுத்தாமையால் வீதியின் மேற்புறம் தளத்தில் குழிகள் உருவாகியிருந்தன. வீதியின் இரு பக்கங்களினது ஓரங்கள் உடைந்திருநதன. வீதியில் சாதாரணமாகக் காணப்பட வேண்டிய 2.35 மீற்றருக்கு குறைவாக அகலம் காணப்பட்டது. |
| (iii) | பானகொடை கெம்பனாவத்தை வீதியின் 0.00 கி.மீ முதல் 0.5 வரையிலும் 3.00 கி.மீ முதல் 8.2 கி.மீ வரை புனரமைக்கும் நிர்மாண வேலை | இரத்தினபுரி நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் | 19,603,535 | 2013.08.08 | ரூபா. 1,049,400 ஆன செலவில் நிர்மாணிக்கப் பட்டிருந்த மதகுகள் உரிய தரத்தில் நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை. மதகு களுக்காக நிர்மாணிக்கப் பட்ட 07 ஓரச்சுவர்கள் வெடித்து உடைந்திருந்தன. ஓரச்சுவர்களில் சாந்து உறுதியற்றதாகியிருந்தது. வீதியின் மேற்புறத்திற்கு இடப்பட்டுள்ள கொங்கிரீட் உடைந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. |
| (iv) | இரத்தூருகல சமன்சிரிக ஊடாக ரத்கங்ஹ வீதி கற்கள் பரப்பட்டு தார் ஊற்றி புனரமைக்கப்படும் செயற்திட்டம் | பிரதேச செயலகம் இரத்தினபுரி | 83,681 | - | வீதியின் அனேக இடங்கள் கீழிறங்கி இருந்ததுடன், வீதியின் மேற்றளத்தின் அடிப்பகுதிக்கு போடப்பட்ட கற்கள் மேற்பகுதியில் காணப்பட்டன. |
| (v) | கஹவத்த கட்டங்கே வீதி 2.00 கி.மீ முதல் 6.27 கி.மீ. வரை அபிவிருத்தி செய்தல் | பெல்மதுள்ள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் | 11,177,683 | 2012.02.17 | வீதியின் 2.5, 3.5, 5.5 கி.மீ என்ற இடங்களில் மட்டும் 1.5x1.5 அளவிலான குழிகள் தோன்றியிருந்தன. |

(ஆ) அலுத்நுவர தேவாலயம் வரையான வீதியில் தேவையான இடங்களில் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிர்மாண வேலைகளுக்காக ரூபா 499,109 செலவிடப்பட்டிருந்தது. அவ்வீதி 2012 யூலை 29 ஆம் திகதி கணக்காய்வுப் பரிசோதனையின் போது தேவாலயத்திற்குச் நுழையும் வீதி உடைந்து சிறிய குழிகளுடன் திருத்தம் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்க வேண்டிய போதும் அவ்வீதி அபிவிருத்தி செய்யப்படாமல் வேறு ஒரு வீதி மூன்று இடங்களில் திருத்தியமைக்கப்பட்டிருந்தன. அந்நிர்மாண வேலைகள் எதுவும் அலுத்நுவர தேவாலயத்திற்கு செல்லும் வீதிக்கு உரித்தானதொன்றல்ல என்றும் மேற்குறித்த தொகையில் ரூபா 354,590 செலவிடப்பட்டு கொங்கிரீட் இடப்பட்டுள்ள வீதி தனிநபர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லும் வீதியொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கலவான மற்றும் பெல்மதுள்ள நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களினால் 02 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட 02 நிர்மாண வேலைகளுக்குரிய ரூபா 1,961,630 ஆன தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.12 தாமதமான செயற்திட்டங்கள்

அமைச்சுக்கள் / திணைக்களங்கள் 06 இற்குரிய 52 நிர்மாண வேலைகள் சீரற்ற காலநிலை மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் போதியளவில் காலம் வழங்கப்படாமை போன்ற காரணங்கள் காரணமாக 2012 திசெம்பர் 31 வரையில் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தன.

## 4.13 முற்றாகக் கைவிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள் / முன்மொழிவுகள்

வீதி அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட 2012 திசெம்பர் 31 உள்ளவாறு ரூபா 10,490,967 மொத்தமாகச் செலவு செய்யப்பட்ட 02 ஒப்பந்த நிர்மாண வேலைகள் முற்றாகக் கைவிடப்பட்டிருந்தன.

## 4.14 பதவியணியினர் நிர்வாகம்

### (அ) கல்வித் துறையில் மிகைகள் மற்றும் பற்றாக்குறை

2012 திசெம்பர் 31 உள்ளவாறு சப்ரகமுவ மாகாண சபையின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்படுள்ளன.

| | இரத்தினபுரி வலயம் | | பலாங்கொடை வலயம் | | எம்பிலிபிட்டியவ வலயம் | | நிவித்திகல வலயம் | | கேகாலை வலயம் | | மாவனல்ல வலயம் | | தெஹியோவிட்ட வலயம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மிகை | பற்றக்குறை | மிகை | பற்றக்குறை | மிகை | பற்றக்குறை | மிகை | பற்றக்குறை | மிகை | பற்றக்குறை | மிகை | பற்றக்குறை | மிகை | பற்றக்குறை |
| அதிபர்கள் | - | 75 | - | 57 | - | 57 | - | 85 | - | 54 | - | 60 | - | 80 |
| ஆசிரியர்கள் **1.**ஆரம்ப நிலை | - | 99 | - | 96 | - | 161 | - | 84 | - | 160 | - | 21 | 118 | - |
| **2.**இரண்டாம் நிலை | 328 | - | 36 | - | - | 231 | - | 65 | 180 | - | 201 | - | 48 | - |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) தெஹியோவிட்ட கல்வி வலயத்தில் 2012 திசெம்பர் 31 உள்ளவாறு 158 சிங்கள மொழி மூல பாடசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 2017 ஆக இருந்த போதிலும், 2,454 பேர் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர், திரட்டிய மிகை 437 ஆக இருந்ததுடன், அது 21 பாடசாலைகளில் 68 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறையாகவும் 118 பாடசாலைகளில் 505 ஆசிரியர்கள் மிகையாகவும் இருக்க வேண்டிய போதிலும், அது முறையற்ற ஆசிரியர் இணைப்புகளின் விளைவாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) நிவித்திகல வலயத்தில் ஆசிரிய நியமன வகைப்படுத்தலின் பிரகாரம் 700 பேர் பற்றாக்குறையாக இருந்ததுடன், 501 ஆசிரியர்கள் மிகையாக இருந்ததுடன், வலயத்தினுள் சரிசெய்யப்படுவதன் மூலம் 244 ஆசிரியர்களின் மிகை மற்றும் பற்றாக்குறையை அகற்றக்கூடியதாக இருந்ததும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 03 வலயக் கல்வி அலுவலகங்களுக்குரிய 08 பாடசாலைகளில் பிரதான பாடங்கள் தொடர்பாக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது பற்றாக்குறையான பாடவேளைகளின் எண்ணிக்கை முறையே 4692 மற்றும் 2226 ஆக இருந்ததுடன், அது அந்தப் பாடசாலைகளின் (க.பொ.த) சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுகாதாரத் துறையின் மிகைகளும் பற்றாக்குறையும்

சுகாதாரத்துறையில் ஒவ்வொரு சேவைகளிலும் ஊழியர் மிகை அல்லது பற்றாக்குறை என்பன வெவ்வேறு நிறுவன மட்டமாக கீழே காட்டப்பட்டுள்ளன.

| | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் | | இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலைகள் | | கேகாலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் கேகாலை மாவட்ட வைத்தியசாலைகள் | | எம்பிலிபிட்டிய ஆதார வைத்தியசாலைகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை |
| மருத்துவர்கள் | - | 3 | 54 | 66 | 46 | 57 | - | 25 |
| தாதிகள் | - | 1 | 64 | 79 | 07 | 66 | - | 45 |
| மருந்தாளர்கள் | - | - | 04 | 19 | - | 10 | - | 15 |
| பொது சுகாதார பரிசோதகர்கள் | - | - | 06 | 08 | - | 30 | - | 01 |
| குடும்ப சுகாதார உத்தியோகத்தர் | - | - | 24 | 98 | - | 48 | - | 05 |
| தொழிநுட்பவியலாளர் | - | - | 06 | 93 | 3 | 9 | - | 13 |
| உதவியாளர் | - | - | 23 | 110 | 25 | 31 | - | 34 |
| தொழிலாளர் | - | 02 | 55 | 294 | 111 | 82 | - | 34 |
| மொத்தம் | **-** | **6** | **236** | **767** | **192** | **333** | **-** | **172** |

4.15 நோக்கத்திற்கு முரணான செலவினம்

(அ) நெல் உற்பத்தி செய்யக்கூடிய 06 ஏக்கர் வயலுக்கும் மேலும் 08 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலத்திற்கும் நீரை வழங்குவதை நோக்காகக் கொண்டு மாகுர அணைக்கட்டினை திருத்தியமைப்பதற்காக விவசாய அமைச்சின் செயலாளரினால் ரூபா 400,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த நோக்கத்திற்கு முரணாக ரூபா 370,272 செலவிடப்பட்டு மாகுர கிராமத்திற்கு செல்லும் வீதிக்கு ஓரச்சுவரொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிரந்தர அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு காணியை சமமான மட்டத்தில் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளுக்காக நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதினூடாக விவசாயத்தை செயற்திறனாக மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் சப்ரகமுவ மாகாண சபையின் காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சின் செயற்பணியாக இருந்த போதும், 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 3,773,886 செலவிடப்பட்டு கேகாலை மாவட்டத்தின் 25 வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அந்த வீதிகள் கமத்தொழில் வீதிகள் அல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டமையால் நோக்கத்திற்கு முரணாக செயற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(இ) சப்ரகமுவ மாகாண சபையின் 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருமானம் - செலவின மதிப்பீட்டின் பிரகாரம் புதிய எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக தலைமை அமைச்சிற்கு ரூபா 1,000,0000 நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அதில் ரூபா 966,000 நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி சப்ரகமுவ மாகாண பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக தமிழ்மொழி மூல தேவாரப் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தன.

## 4.16 கூடுதலாக கொடுப்பனவு செய்தமை

ரம்புக்கன நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தினால் 02 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 70,282 கூட்டுத்தொகையான பணம் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 4.17 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் யப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட UV 1240 மாதிரியிலான 6 Photospectometer களைக் கொள்வனவு செய்வதற்காக 2012 ஏப்ரல் 09 ஆம் திகதி ரூபா 4,926,750 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக சிங்கப்பூரில் உற்பத்தி செய்யப்பட்ட UV 1800 ENG 240 V (soft) மாதிரியிலான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், பொருட்கள் பெற்றுக் கொண்டமை தொடர்பாக தொழிநுட்ப மதிப்பாய்வு அறிக்கையில் யப்பானில் உற்பத்தி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபை பாடசாலைகளில் மூன்றாம் நிலைக் கல்வி தொடர்பாக, கல்வி அபிவிருத்திக்கான செலவின விடயத்தின் கீழ் ரூபா 108,700 கூட்டுத்தொகையான பணத்தை தேசிய பாடசாலைகளின் அதிபர்களை அறிவூட்டுவதற்கான செயலமர்வுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(இ) இரத்தினபுரி புதிய நகர உள்ளக விளையாட்டரங்கின் 2012 ஆம் ஆண்டில் சுத்திகரிப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக முறையான ஒப்பந்தமொன்று இல்லாமல் 06 மாதங்களுக்காக 02 நிறுவனங்களுக்கு ரூபா 103,703 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், இரத்தினபுரி புதிய நகர விளையாட்டரங்கு மற்றும் உள்ளக விளையாட்டரங்கு என்பவற்றிற்காக 2012 ஆம் ஆண்டின் பாதுகாப்பு சேவைகளுக்கான கொள்வனவு குழு தீர்மானம் ஆனது 2012 ஏப்ரல் 04 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், 2012 சனவரி, பெப்ரவரி, மார்ச், மாதங்களுக்காக கொள்வனவு குழுவின் அங்கீகாரம் இல்லாமல் ரூபா 116,480 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

4.18 போதியளவில் நிறைவேற்றப்படாத நோக்கங்கள்

(அ) எம்பிலிபிட்டிய வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாராக் ஆசிரியர் மாணவர் மட்டக் கல்வி நடவடிக்கைகளுக்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 325,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 238,600 ஆன தொகை பெற்றோர்களை அறிவூட்டும் செயலமர்வுகளை நடாத்துவதற்காகச் செலவிடப்பட்டிருந்ததுடன், ஆசிரியர் மாணவர் மட்டச் செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எம்பிலிபிட்டிய வலயக் கல்வி அலுவலகத்தில் ஆரம்ப சேவைகளை வழங்குவதற்காகவும் ஆசிரியர் மாணவர்கள் மட்டச் செயற்பாட்டு செலவின விடயத்தின் கீழ் ரூபா 395,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 223,965 தொகை அதனுடன் தொடர்பில்லாத நோக்கங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

5.1 கூட்டுத் திட்டம்

14 நிறுவனங்களினால் 2012 ஆம் ஆண்டிற்குரிய கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

06 நிறுவனங்களினால் 2012 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

2012 ஆம் ஆண்டின் போது 26 அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் ஒன்று வீதமும், 02 அமைச்சுகளுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் 02 உம் நடாத்தப்பட்டிருந்தன.

5.4 கொள்வனவுத் திட்டம்

12 நிறுவனங்களினால் 2012 ஆம் ஆண்டிற்குரிய கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது குறித்த சப்ரகமுவ மாகாண சபையின் நிறுவனத் தலைவர்களுக்கும் தலைமைச் செயலாளருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்

(ஆ) சொத்துக்களும் மனித வள முகாமைத்துவமும்

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) செயற்திட்ட அமுலாக்கல்

(உ) பாடசாலை முகாமைத்துவம்